மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 14-ம் தேதி அமைச்சரவைக் கூட்டத்தில் நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி முடிவெடுத்து அதன் தொடர்பான நடவடிக்கைகள் தான் இவைகள் என்றுதான் சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இங்கு சொல்லி செய்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கத் தேவை இல்லை. திரு. தங்கமணி அவர்கள் இரண்டு மணிநேர விவாதம்தான் கேட்டார்கள். அடுத்து வருகிற துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போதும், நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரிலும் பேசுவதற்கு இரண்டு நாட்கள் விவாதம் இருக்கிறது. ஆகவே, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) புதிய கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமையிடம் குறித்து அரசு தகுந்த வாக்குறுதி கொடுக்கத் தவறியதன் விளைவாக அங்குள்ள பதட்ட நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், "Serious situation and tension prevailing in Ramanathapuram and neighbouring areas following Bandh for locating Headquarters for East Ramanathapuram and the clashes which took place yesterday and failure of Government to give suitable assurance". என்ற பொருள்பற்றி விவாதிக்கவேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் பிரச்னை மூன்றாண்டுக் காலமாக பல கட்சிகளின் மத்தியில் விவாதத்தில் இருந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் அரசு, இராமநாதபுரம் மாவட்டத்தை கிழக்கு இராமநாதபுரம், மேற்கு இராமநாதபுரம் என்று பிரிக்கப் போகிறோம் என்று தெரிவித்திருக்கிறது. அம்மாதிரி பிரிக்க வேண்டும் என்பதை பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளும் வரவேற்றிருக்கிறார்கள். நான் சார்ந்துள்ள கட்சியும் அதை வரவேற்கிறது. ஏற்கனவே, வாக்குறுதி கொடுக்கப்பட்டு, கிழக்கு இராமநாதபுரத்திற்கு எந்த ஊர் தலைநகராக இருப்பது என்ற ஒரு பிரச்னை எழும்பியது. ஏற்கனவே, அரசு வாக்குறுதி

கொடுத்தபடி எல்லாக் கட்சிகளையும் கூட்டிவைத்து பேசி இந்த இடத்தில்தான் தலைநகரை வைக்கப் போகிறோம் என்று சொன்னால் விகாரத்திற்கே இடமில்லை. எந்த ஊர் என்பது தெளிவாகத் தெரியாமல் பலர் பல ஊர்களைப் பற்றி பேச ஆரம்பித்தவுடன்தான் இந்த நிலைமை ஏற்பட்டது பந்த்க்கு தலைமை தாங்கியிருப்பவர் சட்டமன்ற உறுப்பினர்தான். அவர் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர் தான். ஆகவே, இதில் கட்சிப் பிரச்னை இல்லை. பந்த் மூன்று நாட்கள் நடந்தது.

ஏற்கனவே, நான் இந்த விஷயத்தை எழுப்பினேன். ஆனால், அவசரம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நேற்று நடந்துள்ள சம்பவத்தைப் பார்த்தால் இரண்டு கட்சிகளுக் கிடையில் மோதல் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு வந்துள்ள தகவல், இதுபற்றி சட்ட மன்றத்தில் எந்தவிதமான கருத்தையும் நீங்களும் கிளப்பவில்லை, அரசும் சொல்லவில்லை, மக்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள். அரசு என்ன நிலை எடுக்கிறது என்று தெரிந்தால் அமைதியாக பிரச்னை முடிந்து விடும் என்ற தகவல் தான் வந்திருக்கிறது. இது கட்சிக்கு கட்சி ஏற்படும் மோதல் பிரச்னையல்ல. அப்படி திருப்பிவிட முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லாக் கட்சிகளும் கூடி விவாதித்து அரசு இங்கு உறுதியாகவே சொல்ல வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப் போகிறோம் என்று அரசு தெளிவாகச் சொல்லவேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகள் சேரவில்லை என்பது அதிலிருந்து தெளிவாகும். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொருத்து விவரமான பதில் இங்கு சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கப் போகிறோம் என்ற விஷயம் இந்த மன்றத்தில் சொல்லப்படவில்லை. பிரிக்கப் போகிறோம் என்பதை முதலில் இங்கு தெளிவுபடுத்திய பிறகுதான் தலைநகர் பொறுத்து எல்லாக் கட்சியினரையும் கொண்ட கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அல்லாததுபோனால் தொடர்ந்து விவகாரங்கள் நடந்து கொண்டு தானிருக்குமென்று பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிகிறது.

அப்படி விவகாரங்கள் எற்படுகின்றன என்ருல் அதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. எனவே, இந்தப் பிரேரணையை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இல்லாத ஒரு பிரச்னைக்காக ஒரு கிளர்ச்சி இராமநாதபுரம் நகரில் உருவாக்கப்பட்டு அதன் தொடர்பாக இப்போது ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கிருர்கள். இராமநாதபுரம் மாவட்டம் நிர்வாக வசதிக்காக இரண்டாக பிரிக்கப்படவேண்டும். மேற்கு இராமநாத புரமா அல்லது கிழக்கு இராமநாதபுரமா, அதற்கு என்ன பெயர்கள் என்பதுபற்றியெல்லாம் கூட சொல்லாமல் அரசாங்கம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறது என்றுதான் அறிவித்திருக்கிறது. எங்கு தலைநகரம் இருப்பது, எந்தெந்தத் தாலுகாக்களை எந்தெந்த பகுதியோடு சேர்ப்பது என்பவைகளைப் பற்றியெல்லாம் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

அதுமாத்திரமல்ல. தமிழ்நாடு நிர்வாகச் சீர்திருத்தக் குழு விடம் பொதுவாக தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக இன்னும் சிறிய அளவில் எப்படி எப்படி பிரிக்கலாம் என்பதற்கான வாய்ப்புக் கூறுகளை அரசுக்குத் தரவேண்டும், அப்படிக் கருத்துக்களைப் பெற்ற பிறகு அரசாங்கம் கலந்து ஆலோ சித்து முடிவு மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப, எ. ஆர். ஸி. குழுவினர் எந்த மாவட்டங்களை எப்படி பிரிப்பது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

இதற்கிடையில், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதுக் கோட்டை தனி மாவட்டமாக ஆகும் என்ற அறிவிப்புக்கேற்ப அந்தப் பணிகள்தான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. அதற்காக, ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு அவர்கள் தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்கும் பிரச்னை பற்றியோ அல்லது தலைநகர் பிரச்னைக்கோ எந்தவிதமான கிளர்ச்சியும் எழு வதற்கு சாத்தியக்கூறு இல்லை. நான் கேள்விப்பட்டேன், அது சரியோ தவருே, திரு. தங்கமணி அவர்கள்தான் சொல்லவேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிதான் சிவ கங்கைதான் தலைநகராக இருக்கவேண்டும் என்று ஏழெட்டு நாட்

களுக்குமுன் ஒரு தீர்மானம் போட்டதாகவும், அதற்குப் பிறகு இராமநாதபுரத்தில் இந்தக் கிளர்ச்சி எழுந்தது என்ற தகவல். அது சரியோ தவறோ தெரியவில்லை. ஏனெனில், தவறான தகவலை இந்த அவைக்குச் சொன்னேன் என்று ஆகிவிடக் கூடாது. ஒன்று சொல்வேன். சிவகங்கையில் உள்ள கம்யூனிஸ்ட்ஸ் ஆனாலும் சரி அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தினரானாலும் சரி அங்கேயே இருக்கவேண்டுமென்றுதான் சொல்வார்கள். இராமநாத புரத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் கம்யூனிஸ்ட்களானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தினரானாலும் சரி, அல்லது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அவர்கள் இராமநாதபுரத்தி லேயே இருக்கவேண்டும் என்றுதான் சொல்வார்கள். ஆக, ஒவ் வொரு ஊர் பிரச்னை வந்ததும், அங்கே கட்சிப் பிரச்னைகள் நிச்சய மாக நுழைந்துவிடக்கூடும். ஆகவே, நாம் நிதானமாக அவற்றை அணுக வேண்டும். அரசே அதைப்பற்றி இன்னும் தெளிவாகச் சொல்லவில்லை. அது குறித்து அறிவிக்கவில்லை.

திரு. தங்கமணி அவர்கள் சொல்வது வருந்தத்தக்க ஒன்றாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பந்த் நடத்தப்போகிறார்கள் என்ற செய்தி வந்த உடனேயே நான் விரிவாக ஒரு அறிக்கையை வெளி யிட்டேன். இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படும் என்பதைக் கொள்கை அளவிலே தான் அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அது எப்போது பிரிக்கப்படும், அதன் தலைநகரம் எங்கே வைப்பது என்பதைப்பற்றி இன்னும் யோசிக்கக்கூட இல்லை. ஆகவே, இராம நாதபுரம் மாவட்ட மக்களும், அரசியல் கட்சியில் உள்ளவர்களும் இந்தக் கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லோருடைய முறையீடுகளையும் அரசு கவனத்தில் கொண்டு, பொது மக்களின் எண்ணத்திற்கேற்ப அரசு நடந்து கொள்ளும். ஆகவே, கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று அன்றைக்கே வெளியிட்டு இருக்கிறேன். திரு. தங்கமணி அவர் களும் அதைப் படித்து இருக்கக்கூடும் என்று நம்புகிறேன். எந்த ஊரை இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரமாக வைப்பது என்பதை நிச்சயமாக ஏ.ஆர்.சி. குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு, அரசாங்கம் அவர்கள் சொன்னது போல், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்து, அந்த மாநாட்டிலேதான் அரசு

ஒரு முடிவை எடுக்கும் என்று மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தி, இப்படிப்பட்ட கிளர்ச்சிகளுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்காமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஒரு எண்ணம் நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகளிடத்திலே இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல் எல்லாவற்றையும் செய்து விடுகிறார்களே இந்த அரசினர் என்று சொல்லி, ஏதாவது ஒன்றைச் சாக்காக வைத்துக் கொண்டு கிளர்ச்சி நடத்தலாமா என்ற மனப்போக்கு வளர்ந்து வருகிறது. அந்த மனப்போக்கு வளராமல் பார்த்துக்கொள்வதற்கு எல்லாக் கட்சிகளும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, இன்னும் தலைநகரம் எங்கே வைப்பது என்பதைப் பற்றி தீர்மானிப்பதற்கு முன்பே கிளர்ச்சி நடைபெற்று இருக்கிறது. ஆகவே, அதற்கான ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி இந்த அளவில் முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) வேலூர் அரசினர் பெண்ட்லேண்டு மருத்துவ மனையில் இறந்த முஸ்லீம் மாது, முஸ்லீம் மரபுப்படி அடக்கம் செய்யப்படாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்திப் அவர்கள் "The mysterious death of Mrs. Zaniab Bi, the aunt of the Principal, Nawab Abdul Hakeem Arts College, Melvisharam, at the Government Pentland Hospital, Vellore, on 12th November 1973 where she was knocked down by a rashly driven vehicle on or about 4th November 1973 and the mysterious disappearance of the dead body of the said lady and the consequent unrest that prevails in and around Vellore resulting in all-party agitation fastly spreading in many parts of the district," என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்பு தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைப் பற்றி அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.